

மதுரை கிழக்கு தொகுதி யா.ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்று, தமிழ்நாடு அரசு வழங்கிய நீட் பயிற்சியில் பயிற்சி பெற்று இளங்கலை மருத்துவ படிப்புக்கான நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ள மாணவிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பாராட்டி தனது சொந்த செலவில் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் மடிக்கணினிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மேலூர் மாவட்ட கல்வி அலுவலர் இந்திரா, தலைமை ஆசிரியர் சசித்ரா, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சாந்தமூர்த்தி, கழக நிர்வாகிகள் பாலாண்டி, அண்ணாமலை, ஒத்தக்கடை சரவணன், மீராஜான் மற்றும் ஆசிரியர்கள், மாணவிகள் பங்கேற்றார்கள்



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். உடன் மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் , மேயர் எஸ்.முத்துதுரை ஆகியோர் உள்ளனர்.

### 75 கி.மீ. தூரம் இருவர்ணக் கொடிகள்! இன்று

# சிவகங்கை வருகை தரும் துணை முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்!

*சிவகங்கை, ஜூன் 17 -*

இன்று (17ஆம் தேதி) சிவகங்கை மாவட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். காலை முதல் மாலை வரை அரசு மற்றும் கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். இது குறித்து நேற்று முன் தினம் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் தனியார் மகாலில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது .

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் துணை முதலமைச்சர் வருகை குறித்து அவரது நிகழ்ச்சிகள் குறித்து விரிவாக விளக்கிப் பேசினார்.

இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்டக் கழக துணைச் செயலாளர் த. சேங்கைமாறன் மற்றும் ஒன்றிய நகர நிர்வாகிகள் பேசினார்கள் .

இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இன்று (17ஆம் தேதி) சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழக முதல்வர் தலைவர் கழகத் தளபதி அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் செயல் திட்டங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுமக்களுக்கு கொண்டு சேர்த்திடும் வகையில் இன்று சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வர் அவர்களுக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

இவரது நிகழ்ச்சியில் அனைத்து மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, கழக பேருர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர் தா.ராமையா, முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, அம்பலமுத்து, பி.டி. ஆர்.முத்து, நகர் கழக செயலாளர்கள் சி.எம்.துரை. ஆனந்த், பெரி.பாலா, க. பொன்னுச்சாமி, துணை மேயர் மாநகரச் செயலாளர் நா.குணசேகரன், செயற்குழு உறுப்பினர் மேயர் எஸ்.முத்துதுரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுப. சின்னத்துரை, கே.எஸ். ஆனந்த், நாகனிரவி , பூபாலசிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன், எஸ்.சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், நா. நெடுஞ்செழியன் பூமணி, கே.பாலசுப்பிரமணியன், எம். ஜெயராமன், பெமந்த காளை, திருமலை முத்துராமலிங்கம், அண்ணாதுரை, துரைராஜாமணி, அ. முத்துச்சாமி, ஆறு. செல்வராஜன், ஆர்.எம்..கென்னடி, வே.தமிழ்மாறன், கா.வெங்கட்ராமன், கென்னடி,வே.ஆரோக்கியசாமி, யோக. கிருஷ்ணகுமார், எம்.ஏ.கடம்ப சாமி, திருமதி வசந்தி சேங்கை மாறன், சுப்பிரமணியன், பேருர் கழக செயலாளர்கள் தி.கதிர்வேல், கார்த்திகேயன், அசோக் பீ.ஏ.நஜ்முதீன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் மாவட்டக் கழக செய்தி தொடர்பாளர் அ. அயூப்கான் மற்றும் ஒன்றிய நகர பேருர் செயலாளர்கள், அனைத்து அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

இன்று (17ஆம் தேதி) வருகைதரும் துணை முதலமைச்சர் அவர்களின் வருகை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட எல்லையான பூவந்தியிலிருந்து சிவகங்கை, சோமபுரம், ஒக்கூர், மதகுபட்டி, திருக்கோட்டியூர், திருப்பத்தூர் வரை சுமார் 75 கிலோமீட்டர் தூரம் கழகக்கொடிகள் கட்டப்பட்டுள்ளது. வண்ண கழக தோரணங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 75 கிலோமீட்டர் தூரம் வரை வரவேற்பு சுவர் விளம்பரங்கள் இடம்பெற்றுள்ளது.

**திருப்புவனத்தில் சிறப்பான வரவேற்பு!**

இன்று துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். காலை 9 மணி அளவில் மதுரையில் இருந்து கார் மூலம் வருகை தரும் துணை முதலமைச்சருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் திருப்புவனத்தில் மாவட்டக் கழகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது .

அதனைத் தொடர்ந்து 9.30 மணிக்கு கான்பூர் கண்மாயில் ரூபாய் 41கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கண்மாய் மராமத்து பணிகளை ஆய்வு செய்கிறார். அதை தொடர்ந்து 10.00மணி அளவில் சிவகங்கை முதல் நகர்மன்றத்தலைவர் கழக மூத்த முன்னோடி சொ.லெ.சாத்தையா வீட்டில் அவரை சந்தித்து உடல் நலம் விசாரிக்கிறார். 10.30 மணி அளவில் சிவகங்கை தாலுகா சோழபுரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி ஏற்பு திட்ட பணிகளை பார்வையிடுகிறார். பகல் 11 மணியளவில் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெறும் மாவட்ட அளவில் நடைபெற்றுவரும் அரசு திட்டப் பணிகள் செயல்பாடுகள், அதன் முன்னேற்றங்கள் குறித்து மாவட்ட அனைத்து அரசுத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு நடத்துகிறார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான திடலில் முடிவுற்ற அரசு திட்டப் பணிகளை துவங்கி வைத்தும் புதிதாக திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் விழா பேருரையாற்றுகிறார். விழா மேடையில் பல்வேறு அரசு துறைகளில் சார்பில் 500க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

**கார் மூலம் மதுரை பயணம்!**

அதனைத் தொடர்ந்து மாலை 4 மணி அளவில் கார் மூலம் திருப்பத்தூர் செல்லும் துணை முதலமைச்சர் அவர்கள் திருப்பத்தூர் சிவகங்கை சாலையில் உள்ள தனியார் மகாலில் அனைத்து சார்பு அணி நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசனை நடத்துகிறார். அதைத் தொடர்ந்து ஆர்.கே .மஹாலில் மாவட்ட இளைஞரணி ஒன்றிய, நகர,பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களைச் சந்தித்து பேசுகிறார். மாலை 6:45 மணிக்கு கார் மூலம் மதுரை செல்கிறார். மதுரையில் இருந்து விமானம் மூலம் சென்னை செல்கிறார். இன்று சிவகங்கை வருகை தரும் துணை முதலமைச்சர் அவர்கள் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் மாவட்ட ஒன்றிய , நகர, பேரூர், கழக நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகளை செய்துள்ளார்கள். துணை முதல்வர் அவர்கள் வருகையினை முன்னிட்டு சிவகங்கை மாவட்டமே விழாக்கோலமாக காணப்படுகிறது.




நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சப் ஜூனியர் ஆண்களுக்கான சாம்பியன்ஷிப் ஹாக்கி போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற சப் ஜூனியர் ஹாக்கி அணியினரும், சீனியர் ஆண்களுக்கான சாம்பியன்ஷிப் ஹாக்கி போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்ற சீனியர் ஹாக்கி அணியினரும் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமாரை சந்தித்து வெற்றி பெற்ற கோப்பை மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

